

வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் இளைய நல்லூர் ஊராட்சி ஜங்காலப்பள்ளியில் பகுதி நேர நியாயவிலைக் கடையை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்து பொருட்கள் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, வேலூர் மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஊராட்சி குழுத்தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், காட்பாடி ஒன்றிய கழக செயலாளர் கே.கருணாகரன், கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர் குணஜயப்பதுரை, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கலைவாணி, ஒன்றிய குழு உறுப்பினர்கள் சுஜாதா, கவிதா, ஊராட்சி மன்ற தலைவர் கீதாஞ்சலி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சென்னை – லஸ் சர்ச் சாலையில் போக்குவரத்துத் தீவு!

# “இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் போக்குவரத்துத் தீவு” - பெயர்ப்பலகை!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

சென்னை, டிச. 27 -

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, லஸ் சர்ச் சாலையில் உள்ள போக்குவரத்துத் தீவிற்கு புதிதாக பெயர் சூட்டப்பட்ட “இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் போக்குவரத்துத் தீவு” பெயர்ப்பலகையினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு123, லஸ் சர்ச் சாலை, காவேரி மருத்துவமனை அருகில் உள்ள போக்குவரத்துத் தீவிற்கு (Traffic Island) “இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் போக்குவரத்துத் தீவு” என்கிற பெயர் சூட்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, லஸ் சர்ச் சாலை போக்குவரத்துத் தீவில் நேற்று (26.12.2024) நடைபெற்ற விழாவில், புதிதாக பெயர் சூட்டப்பட்ட “இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் போக்குவரத்துத் தீவு” பெயர்ப்பலகையினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன், ஆணையாளர் ஜெ.குமரகுரு பரன், மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் திருமதி மோ. சரஸ்வதி, இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் அவர்களின் மகள் திருமதி புஷ்பா கந்தசாமி மற்றும் குடும்பத்தினர், ரசிகர்கள் சங்க நிர்வாகிகள் நடிகர் ராஜேஷ், வி.பாபு, முகமது இலியாஸ், நடிகர் கலைமாமணி பூவிலங்கு மோகன், நடிகர் தசரதி, ஒளிப்பதிவாளர் விக்ரமன், தமிழ்நாடு இயக்குநர் சங்கப் பொதுச் செயலாளர்/இயக்குநர் ம.பேரரசு, பொருளாளர் சரண், தமிழ்நாடு சின்னத்திரை இயக்குநர்கள் சங்கம் / தமிழ்நாடு சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பு சங்கத் தலைவர் மங்கை அரிராஜன், சின்னத்திரை நடிகர் சங்கத் தலைவர் சிவன் சீனிவாசன், திரையுலகப் பிரமுகர்கள்/நடிகர்கள் எஸ்.வி.சேகர், பிரமிட் நடராஜன், அழகு, டி.வி.வரதராஜன், நாகேஷ் ஆனந்த்பாபு, நடிகை காயத்ரி ரகுராம், திரைப்பட இயக்குநர்கள் வசந்த், நாகா, கலை இயக்குநர் சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் சா.மு.நாசர் தலைமையில்

# அயலகத் தமிழர் ஜன.2025 - கலந்தாய்வுக் கூட்டம்!

## ஜன. 11, 12 தேதிகளில் நடைபெறவுள்ள நிகழ்ச்சி குறித்து ஆலோசனை!

சென்னை, டிச. 27 -

நான்காவது “அயலகத் தமிழர் தினம் 2025” வருகிற “ஜனவரி மாதம் 11 மற்றும் 12”ஆகிய தேதிகளில் “எத்திசையும் தமிழணங்கே” என்ற கருப்பொருளில் நடைபெற உள்ளதால், அது குறித்து கலந்தாய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் தலைமையில் நடைபெற்றது.

2025 அயலகத் தமிழர் தின விழாவில் கலாச்சாரம், பொருளாதாரம், கல்வி மற்றும் திறன் மேம்பாடு போன்ற துறைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு, தொழில் முனைவு, வளர்ச்சி மற்றும் முதலீட்டு வாய்ப்புகள், மருத்துவ சுற்றுலா, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள், வெளிநாட்டில் தமிழ் மொழி கற்பிப்பது மற்றும் அயல்நாடுகளில் தமிழ் ஊடகம் போன்ற தலைப்புகளின் அமர்வுகள் அமைச்சர்கள் மற்றும் அயலகத் தமிழர்கள் முன்னிலையில் நடத்தப்படும்.

கல்லூரி மாணவர்களுக்காக பிரத்யேகமாக மின்வாகன தொழில்நுட்பம், வங்கி மற்றும் நிதி சார்ந்த தொழில்நுட்பம், குவாண்டம் கம்ப்யூட்டிங் உயிரி தொழில்நுட்பம் மற்றும் வெளிநாடுகளில் இருக்கும் வேலைவாய்ப்புகளைப் பற்றி அங்குள்ள தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த துறைசார் வல்லுநர்கள் விரிவாக உரையாற்ற உள்ளனர்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு ஆய்வு மற்றும் மேம்பாடு (R&D) திறன்களைஊக்குவிப்பதற்காக உலகெங்கிலும் உள்ள துறைசார் வல்லுநர்களை வழிகாட்டியாக அமைக்கும் பணிகளில் அயலகத் தமிழர் நலத் துறை ஈடுபட்டுள்ளது. இதுகுறித்து இவ்விழாவில் ஒரு கலந்துரையாடல் நிகழ்வு நடத்தப்படவுள்ளது.அயலகத் தமிழர் நலத் துறையின் இந்த பிரிவு பேராசிரியர்கள் பரிமாற்றம், பண்பாட்டு பரிமாற்றத் திட்டங்கள், இணை ஆய்வு முயற்சிகள் மற்றும் பிற செயல்பாடுகளில் தமிழக மாணவர்கள், ஆய்வாளர்கள் ஈடுபட உறுதுணையாக இருக்கும்

மேலும், Southern India Chamber of Commerce and Industry (SICCI) உடன் இணைந்து, பல்வேறு நாடுகளில் அங்குள்ள தமிழ் சங்கங்கள் மற்றும் தொழில் அமைப்புகளுடன் இணைந்து ‘ஒருங்கிணைப்பு மையங்கள் (Country desk) அமைக்கப்பட உள்ளது. இவை தொழில், கல்வி, சுற்றுலா மற்றும் முதலீடு உள்ளிட்ட துறைகளின் ஒத்துழைப்புக்கு முன்னோடியாக செயல்படும்.

வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், இருநாள் நிகழ்வின் போது பொருளாதார தொடர்புகளை ஏற்படுத்த (Reverse BuyerSeller Meet RBSM) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) துறையின் FaMeTNமுகமை மற்றும் இந்திய ஏற்றுமதி அமைப்புகளின்கூட்டமைப்புடன் (FIEO) இணைந்து நடத்தப்படுகிறது. இது உலகளாவிய வாங்குபவர்கள் மற்றும் ஒத்துழைப்பாளர்களுடன் தமிழக தொழில் முனைவோர்களை ஒருங்கிணைத்து, இறக்குமதி ஒப்பந்தங்களை ஊக்குவித்து, நீடித்த மற்றும் நிலையான வாய்ப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களாக மாற வழிவகுக்கும்.

இந்த நிகழ்வின் முக்கிய சிறப்பம்சமாக, தமிழ் புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்த சாதனையாளர்களை அங்கீகரிக்கும் விதமாக, 8 பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட உள்ளன.அவற்றில் கனியன் பூங்குன்றனார் விருதுகள் (வணிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், பெண்கள், கல்வி, சமூக மேம்பாடு மற்றும் மருத்துவம் ஆகியவற்றில் பங்களிப்புகளுக்கானது), மேலும், முதல் முறையாக, அயலகச்சூழலில் தலைசிறந்து விளங்கும் தமிழருக்கு ‘தமிழ் மாமணி’ விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அயலகத் தமிழர் நலத்துறையின் ‘வேர்களைத் தேடி’ திட்டத்தின் பங்கேற்பாளர்கள் ‘பண்பாட்டுத் தூதுவர்’ என்று சிறப்பிக்கப்படுகின்றனர். அவர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து ‘சிறந்த பண்பாட்டுத் தூதுவர்’ என்று விருதளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கென தனிப்பட்ட கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு உள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME), புதுப்பிப்பு நிறுவனங்கள் (Startups), சுய உதவிக் குழுக்கள் (SHG), தமிழ்ச் சங்கங்கள், வணிக சங்கங்கள் மற்றும் தமிழர் வியாபாரத்தைச் சார்ந்த பிற நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்த அழைக்கப்படுகின்றன. இக்கண்காட்சி அரங்கங்களுக்கான முன்பதிவு இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. தனியார் காட்சி அரங்குகள்

2. தமிழ்ச் சங்கம் அரங்குகள்

கண்காட்சி அரங்குகளுக்கான முன்பதிவு 26.12.2024 அன்று தொடங்கியது. அரங்கு விண்ணப்பங்கள் துறையின் ஆய்வுக்குப் பின் பங்குபெற ஒப்புதல் வழங்கப்படும்.

இந்நிகழ்வில் பங்கேற்பவர்கள்/கலந்து கொள்பவர்களுக்கான பதிவு தற்போது நடைபெற்று வருகிறது. பதிவு மற்றும் கூடுதல் விவரங்களுக்கு https://nrtamils.tn.gov.in இணையதள முகவரியை அணுகவும்.



சிங்கப்பூரில் மூன்றாம் நாள் பயணத்தைத் தொடங்கும் முன் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியுடன் மாணவ மாணவிகள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டதோடு, கல்வி, தொழிற்நுட்பம் சார்ந்த கலந்துரையாடலை மேற்கொண்டனர்.




கலைஞர் 100 1924 - 2023

## தி.மு.க. இளைஞர் அணி

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 8 – இல் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கு வரும் 28.12.2024 அன்று சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 28.12.2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | 8 | இராமநாதபுரம் | கிங் பேலஸ், பழைய செக் போஸ்ட், ராமேஸ்வரம் பிரதான சாலை, பட்டினம்காத்தான், இராமநாதபுரம். |
| | மாலை 4.00 மணி | | திருவாடானை | குட்லு மஹால், டி.டி.பிரதான சாலை, ஆர்.எஸ்.மங்கலம், திருவாடானை. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 26-12-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி





பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (26.12.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக ஜமுனாமரத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மலைவாழ் மக்களுக்காக இருசக்கர அவசர கால ஊர்தியினை கொடியசைத்து பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், குழும இயக்குநர், தேசிய நலவாழ்வு குழுமம் திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் மரு. அருண்தம்புராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை (திருவண்ணாமலை), எம்.எஸ்.தரணிவேந்தன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), ஒ.ஜோதி (செய்யாறு), மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பி. மணிவண்ணன் தலைமை! நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை! தமிழ்தாசன் - த.தங்கமுத்து பங்கேற்பு!

# மதுரவாயல் 91வது வட்டத்தில் தெருமுனைக் கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, டிச.27-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி 91வது வட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு தெருமுனைக் கூட்டம் இன்று (27.12.2024- வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, எஸ்.பி.ஐ.ஓ.ஏ. பள்ளி எதிரில் - முகப்பேர் மேற்கு ஏரித் தோட்டத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அப்பு என்கிற பி. மணிவண்ணன் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகிக்கிறார்.

வட்டச் செயலாளர் எம்.கே.பி. அண்ணாதாசன், ஆ.மாலினி எம்.சி., ஆர்.ரசூல்தீன், ஆர்.ராக்கேஷ், டி.தாமோதரன், எஸ்.ராஜேந்திரன், எம். செல்வக்குமார், எஸ். கெஜலட்சுமி, ஏ.அப்பாசாமி, எம்.கோபி, ஆர்.ஆனந்தஜோதி, ஜெ.சௌரி, எம். கே.பி.ஜெயசீலன், வி.செல்வக்குமார், ஆர்.அமுதா ராமச்சந்திரன், டி. கன்னியப்பன், ஜெஸ்வந்த் நகர் எம்.டில்லிராஜா, தயாநிதி பிரபு, எஸ்.ஜானகி, ஜி.வசந்தி, கோ.மணி, கே.கே.முனீஸ்வரன், கே.சண்முகம், பி.சுரேஷ், எஸ்.சண்முகம், பி. முத்துக்குமார், என்.வடிவேல், ஏ. கார்த்திக் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் தமிழ்தாசன், த.தங்கமுத்து ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

மேலும் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., பி.டி. பாண்டிச்செல்வம், அ.ம.துரை வீரமணி, கே. குமரேசன், ச.சங்கர் கணேஷ், எம்.கே.பி.உதயசூரியன், ஆர்.கர்னால், எம்.ஏ. செந்தில் சுரேஷ், தீ.பாலாஜி, எம்.உதயகுமார், எஸ்.ஜி.மாதவன், ப. ஆலன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், எம். ரூபன், எம்.இ.ஸ்டாலின், ரமணி மாதவன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

பி.தயாநிதி பிரபு, வி. யோகேஷ்வரன், கொரியர் விவேகானந்தன், எம்.விக்னேஸ்வரன், எஸ்.மணிகண்டன், வி.கௌசிக் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், கீழூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.39.95 இலட்சம் மதிப்பீட்டில் கிராம ஊராட்சி அலுவலக கட்டிடத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். இதில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், ஒன்றியச் செயலாளர் பையனூர் சேகர் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.